**<u>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்</u>**
**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>எண்.47</u>** **<u>தேதி–05.05.2020</u>**

## "தாழ்வழுத்த மின்நுகர்வோர்களின் கவனத்திற்கு'

கோவிட்–19 பரவுதலால் 24.03.2020 நள்ளிரவு முதல் ஊரடங்கு அமலில் உள்ளது. தற்போது இந்திய அரசு ஊரடங்கினை மேலும் 2 வாரங்களுக்கு 04.05.2020 முதல் 17.05.2020 வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. தமிழ் நாட்டிலும் அதே போன்று ஊரடங்கு 04.05.2020 முதல் 17.05.2020 வரை சில வழிகாட்டுதல்களுடன் தொடரப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் 05.05.2020 அன்று நடத்திய கலந்தாய்வில் வெளியிட்ட வழிமுறைகள் கீழ்வருமாறு:

அ) முந்தைய மாத கணக்கீட்டின்படி, மின்கணக்கீடு செய்யப்பட்ட தாழ்வழுத்த தொழிற்சாலை மற்றும் வணிக மின் நுகர்வோர்கள் (LT industrial and commercial) தங்களது மின்கட்டணத்தை முந்தைய மாத கணக்கீட்டின்படியோ அல்லது அவர்களது மின்அளவியில் உள்ள மின்நுகர்வுக்கு ஏற்ப திருத்தப்பட்ட பட்டியல்படியோ 22.05.2020 வரை மின்கட்டணம் செலுத்தலாம்.

ஆ) வீட்டு உபயோக தாழ்வழுத்த மின் நுகர்வோர்களைப் பொறுத்தவரை எங்கெல்லாம் முந்தைய மாத கணக்கீட்டு தொகையின்படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதோ, அந்த நுகர்வோர்களுக்கு அடுத்த மின் அளவீடு, சம்பந்தப்பட்ட அடுத்த மின் கணக்கீடு நாளன்று எடுக்கப்படும். எனவே, அவர்களுக்கு மின் கணக்கீடு இரண்டு இருமாத மின் அளவீட்டிற்கு மேற்கொள்ளப்படும். அவ்வாறு கணக்கீடு செய்யப்பட்ட மின் அளவீட்டிற்கான தொகையில், முந்தைய மாத மின் கணக்கீட்டின்படி செலுத்தப்பட்ட தொகையானது சரி செய்யப்படும். அதற்கான மாதிரி கணக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக ஒரு நுகர்வோரின் மின் அளவீடு கோவிட்–19 காரணமாக முந்தைய மாத கணக்கீடுபடி எடுக்கப்பட்டு பின்னர் அதைத் தொடர்ந்து அடுத்த இருமாத மின் அளவீடு அடுத்த கணக்கீடு மாதத்தில் மேற்கொள்ளப்படும்போது கீழ்வருமாறு கணக்கீடு செய்யப்படும்:

| மின் அளவீடு கணக்கீடு செய்யப்பட்ட மாதம் | மின் அளவீடு | நுகர்வு கணக்கீடு (யூனிட்டில்) | கணக்கீட்டு தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| டிசம்பர் 2019 | 660 | | |
| பிப்ரவரி 2020 | 860 | 200 | மின்கட்டண விபரம்<br>0–100 இல்லை<br>101–200 150<br>நிலைக்கட்டணம் 20<br>–––––<br>மின்கட்டண தொகை 170 |
| ஏப்ரல் 2020 | முந்தைய மாத கணக்கீடு தொகை | | 170 |
| ஜூன் 2020 | 1290 | 430 | இருமாதம் ஒன்றிற்கான நுகர்வு<br>430/2 = 215 யூனிட்டுகள்<br><u>மின் கட்டண கணக்கீடு</u>:<br>மின்நுகர்வு கட்டணம்<br>0–100 இல்லை<br>101–200 200<br>201–215 45<br>நிலைக்கட்டணம் 30<br>–––––<br>மின்கட்டண தொகை 275<br>இரண்டு இருமாதங்களுக்கு<br>ரூ.275x2 = ரூ.550<br>**<u>கழித்தல்</u>**:<br>ஏற்கனவே முந்தைய மாத மின்கட்டணம் செலுத்தியது = ரூ.170<br>–––––<br>மீதத்தொகை அடுத்த கணக்கீட்டு மாதத்தில் செலுத்த வேண்டியது = ரூ.380 |

இ) 25.03.2020 முதல் 17.05.2020 வரை மின்கட்டணம் செலுத்த கடைசி தேதி உள்ள தாழ்வழுத்த (LT/LTCT) நுகர்வோர்கள் தங்களது மின்இணைப்பிற்கான மின்கட்டணத்தை 22.05.2020 வரை தாமத கட்டணம் மற்றும் மறு மின்இணைப்பு கட்டணமின்றி செலுத்தலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது..”

தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய்

**வெளியீடு: தலைமை மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை–2.**

**TANGEDCO**

**PRESS RELEASE – 47** **Date:05.05.2020**

**"KIND ATTENTION OF TANGEDCO's LOW TENSION CONSUMERS**

In view of the COVID-19 outbreak, there has been lock down since 24.03.2020 midnight. Now, the Government of India has announced extension of lockdown for a further period of 2 weeks from 04.05.2020 i.e. up to 17.05.2020. The lock down has been accordingly continued in Tamil Nadu with some guidelines with effect from 04.05.2020 to 17.05.2020.

In this connection, as per the direction of the Hon'ble Chief Minister of Tamil Nadu, the Hon'ble Minister for Electricity and Prohibition, GoTN held a review meeting in TANGEDCO on 05.05.2020 issued the following instructions:

a) LT Industrial and Commercial consumers who have been billed under Previous Month Billing (PMC) can make payment upto 22.05.2020 based on PMC or by way of revised bill for actual consumption by furnishing the self assessment reading.

b) In case of LT domestic consumers wherever billing is made under PMC due to COVID-19, the next reading will be taken only on the next due date. Hence the billing is to be made for two bi-monthly readings. The payment made for the PMC will be adjusted after ascertaining the reading during the next assessment of the respective CC bills. An illustration is given here under:

A consumer who has been billed under PMC during COVID-19 and the actual reading taken during next assessment month, the manner of detailed billing in such cases is outlined below:

| Reading month | Reading | Consumption in Units | Assessment Amount (in Rs.) |
|---|---|---|---|
| December 2019 | 660 | | |
| February 2020 | 860 | 200 | Energy Charges<br>0-100 Nil<br>101-200 150<br>Fixed Charges 20<br>------<br>Billed amount 170<br>------ |
| April 2020 | PMC billed | | 170 |
| June 2020 | 1290 | 430 | Bi-monthly consumption for each bi-month<br>430/2 = 215 Units for each bi-month.<br>**Assessment calculation for 215 Units for one bi-month:**<br>Energy Charges<br>0-100 Nil<br>101-200 200<br>201-215 45<br>Fixed Charges 30<br>------<br>Billed amount (Rs.) 275<br>------<br>Total assessment amounts for two bi-months<br>Rs.275*2 = Rs.550<br>**Less:**<br>Amount already billed during PMC assessment month = Rs.170<br>Net amount to be billed for next assessment month<br>---------<br>= Rs.380<br>--------- |

c) Extension of time for payment of all LT and LTCT consumers whose due dates fall between 25.03.2020 to 17.05.2020, shall be granted up to 22.05.2020, without levy of BPSC and DC-RC fees.

**Chief Financial Controller/Revenue**

**Issued by :Chief Public Relations Office**
**TANGEDCO / CH-2.**